# ஆண்டறிக்கை

# 2018

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# நோக்கு

சிறுவர்களுக்கு சாதகமான மற்றும் பாதுகாப்பான சூழலொன்றை கட்டியெழுப்புதல்.

# செயற்பணி

சிறுவர்கள் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் விடுதலை பெற்றிருப்பதை உறுதிசெய்தல்.

## 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை

| | |
|---|---|
| சட்டத்தரணி திருமதி மரினி டி லிவேரா (2017.04.11 முதல் 2018 ஏப்ரல் மாதம் வரை)<br>சட்டத்தரணி திரு எச்.எம். அபயரத்ன (2018.04.09 முதல்) | தவிசாளர்,<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை,<br>இல. 330, தலவத்துகொட வீதி,<br>மாதிவெல, ஸ்ரீ ஜயவர்த்தனபுர |
| சட்டத்தரணி திரு எச்.எம். அபயரத்ன (2017.12.04 முதல் 2018.04.08 வரை)<br>திருமதி சுஜாதா குலதுங்க<br>(2018.06.18 முதல்) | பிரதி தவிசாளர்,<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை,<br>இல. 330, தலவத்துகொட வீதி,<br>மாதிவெல, ஸ்ரீ ஜயவர்த்தனபுர |
| பேராசிரியர் அஷ்வினி டி பெர்ணாந்து | சிரேஷ்ட சிறுவர் நோயியல் நிபுணர்,<br>ஆதார வைத்தியசாலை,<br>ராகம |
| டாக்டர் திருமதி அபேக்ஷா ஹேவாகீகன | உளவியல் மருத்துவ நிபுணர்,<br>ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை,பொரளை |
| டாக்டர் திரு யூ.ஏ.கே. தென்னக்கோன் | பிரதம நீதிமன்ற மருத்துவ அலுவலர்,<br>நச்சுயியல் மற்றும் சட்ட மருத்துவ நி-றுவகம்,<br>பொரளை,<br>கொழும்பு 08. |
| சட்டத்தரணி செல்வி அயேஷா ஜினசேன | சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல்,<br>சட்டமாஅதிபர் திணைக்களம்,<br>கொழும்பு 12. |
| டாக்டர் திருமதி அயேஷா லொக்குபாலசூரிய | சமுதாய சுகாதார மருத்துவ நிபுணர்,<br>குடும்ப சுகாதார பணியகம்,<br>கொழும்பு 08. |
| திரு எம்.ஆர். லத்தீப் | சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மாஅதிபர்,<br>விசேட அதிரடிப் படை தலைமையகம்,<br>பௌத்தலோக மாவத்தை,<br>கொழும்பு 07 |

| | |
|---|---|
| திருமதி சந்திமா சிகேரா | ஆணையாளர்,<br>நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்,<br>IIஆம் கட்டம், செத்சிறிபாய,<br>பத்தரமுல்லை |
| திரு ஏ. விமலவீர | தொழில் ஆணையாளர் நாயகம்,<br>தொழில் திணைக்களம்,<br>நாராஹேன்பிட்டி,<br>கொழும்பு 05 |
| திருமதி சுஜீவா பல்லியகுருகே | பணிப்பாளர் - அபிவிருத்தி,<br>சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு,<br>IIஆம் கட்டம், செத்சிறிபாய,<br>பத்தரமுல்லை |
| திரு ஆர்.எம்.ஏ. ரத்நாயக்க | மேலதிகப் பணிப்பாளர் நாயகம்,<br>திறைசேரி நடவடிக்கை திணைக்களம்,<br>நிதி அமைச்சு,<br>கொழும்பு 01 |
| திரு அசங்க சஞ்ஜய பண்டார | சிரேஷ்ட பயிற்சி ஆலோசகர்,<br>மாகாண பயிற்சிக்குழு,<br>பிரதம செயலகம்,<br>வடமேல் மாகாணம் |
| திரு ஏ.ஆர்.பீ.சீ. உதயகுமார | குற்றவியல் பற்றிய சிரேஷ்ட விரி-வுரையாளர்<br>ஸ்ரீ ஜயவர்த்தனபுர |

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2018 ஆம் ஆண்டிற்கான சபை உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| திருமதி ரோஷினி விலாசிதா | சிரேஷ்ட உதவிச்செயலாளர்<br>நீதி அமைச்சு,<br>உச்ச நீதிமன்றக் கட்டிடத்தொகுதி,<br>கொழும்பு 12 |
| கலாநிதி திரு மதுர எம். வேஹெல்ல | மேலதிகச் செலயாளர்,<br>கல்வி அமைச்சு,<br>இசுறுபாய,<br>பத்தரமுல்லை |
| திரு டபிள்யு.ஏ. குலசூரிய | மேலதிகச் செயலாளர்,<br>பாதுகாப்பு அமைச்சு,<br>சாரணர் மாவத்தை,<br>கொழும்பு 03 |
| திருமதி பீ.ஜே.டி. பெர்ணாந்து | சிரேஷ்ட உதவிச் செலயாளர்,<br>சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு,<br>செத்சிறிபாய,<br>பத்தரமுல்லை. |
| திரு ஏ.எச்.எல்.டி. சொய்சா | சிரேஷ்ட உதவிச் செயலாளர்,<br>உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு,<br>இல. 330, யூனியன் பிளேஸ்,<br>கொழும்பு 02 |
| திரு பீ. மஹாதேவ | ஆணையாளர்,<br>மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு,<br>தொழில் திணைக்களம்,<br>கொழும்பு 05 |
| திருமதி ஹேமா பெரேரா | சிரேஷ்ட உதவிச் செயலாளர்,<br>வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு,<br>இல. 163, கிருலப்பனை மாவத்தை,<br>பொல்ஹேன்கொட,<br>கொழும்பு 05 |

| உள்ளடக்கம் | பக்க இல |
|---|---|
| அறிமுகம் | 01 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி விரிவாக்கம் | 03 |
| அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு | 05 |
| 2018 ஆம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு | 06 |
| 2018 ஆம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 07-09 |
| **அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்** | |
| சிறுவர் பாதுகாப்புக்கான தேசியக் கொள்கை | 10 |
| பாடசாலை பாடவிதானத்திற்கு வாழக்கைத்திறனை அறிமுகம் செய்தல் | 10 |
| திடீர் அனத்த நிலைமைகளின்போது சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை உள்ளடக்கிய கையேட்டைத் தயார் செய்தல் (சிறுவர்களுக்கான உளவியல் சமூக முதலுதவி) | 11 |
| சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்தல் | 11 |
| சாதாரண சிறுவர் பாதுகாப்பு பாடநெறியின் பயிற்றுவிப்பாளருக்கான வழிகாட்டல் தொகுப்பை அச்சிடுதல் (Child Care NVQ 4) | 12 |
| சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகள் மற்றும் தடுப்பு இல்லங்களிலுள்ள சிறுவர்களுக்கு உளவியல் சமூக தலையீடு | 12 |
| பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கான சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றிய கையேட்டை தயார் செய்தல் | 12 |
| சிறுவர்களுக்கான சாதாகமான பாடசாலைச் சூழலை உருவாக்குதல் | 12 |
| ஜனபவுர தேசிய நிகழச்சித்திட்டம் (சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களைவ லுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்) | 13 |
| தேசிய கல்வியியற் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்களை அறிவுறுத்தும் நிகழ்சித்திட்டம் | 13 |
| சுகாதார தொழிலாளர் வல்லுநர்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 14 |
| சிறுவர் துஷ்பிரயோகங்களிருந்து சிறுவர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான திறமைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் | 14 |
| சிறுவர் ஊழியத்திற்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு "சிறுவர் ஊழியத்தை ஒழிப்போம்" எனும் தலைப்பின் கீழ் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 14 |
| சர்வதேச சிறுமியர் தினத்தை முன்னிட்டு தோட்டத்துறை மற்றும் மீனவர் சமுதாயங்கள் சார்ந்து வாழும் சிறுமியரை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 15 |
| கரையோர வலயங்களில் சிறுவர் பாதுகாப்புக்கான முன்னோடி கருத்திட்டம் | 15 |
| தோட்டத்துறையில் வாழும் சிறுவர்களின் அரவணைப்பை உறுதி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் | 16 |
| ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சமவாயம் பற்றி சமுதாயத்தினரை விழிப்புணர்வூட்டல் | 16 |
| சிறுவர் பாதுகாப்பு பற்றிய கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்துதல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பற்றிய நாடகங்களை அரங்கேற்றல் | 18 |
| சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | 19 |
| சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சிகளை வீடியோ ஒளிப்பதிவு செய்தல் | 20 |
| சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்குகின்ற மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களை (சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) கண்காணிப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம். | 20 |
| உளவியல் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்குதல் | 20 |
| சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்பட்ட , ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற சிறுவர்களுக்கு உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்வி வசதிகளைச் செய்துகொடுத்தல் | 21 |
| திடீர் அனர்த்த நிலைமைகளுக்கு ஆயத்தமாவதும் , விழிப்புணர்வூட்டுவதும் | 21 |
| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குறுத்துவதும் மதிப்பீடு செய்வதும் | 21 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோபூர்வ இணையத்தளத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய தகவல் இணையத்தளத்தை வடிவமைத்தல் | 21 |

| | |
|---|---|
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நூலகத்தை அபிவிருத்தி செய்தல் | 22 |
| சிறுவர் பாதுகாப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டல் தொகுப்பு தொடர்பில் அலுவர்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்றுவித்தல் | 23 |
| இள வயது திருமணத்தை தடுப்பதற்காக மாவட்ட மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் | 24 |
| சிறுவர் ஆட்கடத்தலில் காணப்படுகின்ற சிக்கல்களை ஆக்கபூர்வமான முறையில் புரிந்துகொள்ளல் மற்றும் மேற்படி பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் சமூகமயப்படுத்தல் பற்றிய கையேட்டை வடிவமைத்தல். | 24 |
| தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல் | 24 |
| வெகுசன ஊடக ஒருங்கிணைப்பு | 24 |
| சிறுவர் துஷ்பிரயோகம் சிறுவர் சந்தேக நபர்கள் பற்றி அறிக்கையிடும்போது சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக ஊடகவியலாளர்கள் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பான தேசிய வழிகாட்டல் தொகுப்பு | 25 |
| 2018 சர்வதேச சிறுமியர் தின தேசிய வைபவம் | 25 |
| சிறுவர் பாதுகாப்பு பற்றிய தகவல்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்ட , நாட்டின் முதலாவது பஸ் தரிப்பு நிலையத்தை திறந்து வைத்தல் | 26 |
| 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை | 27 |
| சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள் | 28 |
| 2018 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை (மாவட்டரீதியாக) | 28 |
| 2018 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் தன்மைக்கு அமைய வகைப்படுத்தல் | 29 |
| சட்டரீதியான பணிகள் | 30 |
| 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டத்திற்கு அமைய சட்டப் பிரிவின் பங்களிப்பு வழங்குகளின் எண்ணிக்கை | 30 |
| சட்டப் பிரிவின் பங்களிப்பு வழங்கப்பட்ட வழங்குகளின் எண்ணிக்கை | 31 |
| சட்டப் பிரிவு , சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் வேறு விசாரணை நிறுவனங்களின் முன் ஆஜரான தடவைகளின் எண்ணிக்கை | 31 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் சட்டப் பிரிவின் பங்களிப்பு | 31 |
| விசேட பொலிஸ் விசாரணைகள் | 33 |
| 2018 ஆம் ஆண்டு விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவுக்கு நேரடியாகக் கிடைத் முறைப்பாடுகள் | 33 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 2018.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக்கூற்று | 34 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 2018.12.31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக்கூற்று | 35 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 2018.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான காசோட்டக்கூற்று | 36 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 2018.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான உரிமைமாற்றம் பற்றிய கூற்று | 38 |
| தேசிய கணக்காய்வு அலுவலகம்<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டரீதியான இ ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பிலான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 39 -43 |

# அறிமுகம்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த ஆண்டில் பல்வேறு பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண்டது. சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் தேசிய கொள்கையைத் தயார் செய்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட வழிகாட்டல்களைத் தயார் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. அதற்கமைய இந்த ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான ஆரம்பகட்டப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

1989 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி 'ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்' உலகப் பிரகடனமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. இந்த சமவாயம் 54 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், அதன் மூலம் உலகின் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தாக வேண்டிய உரிமைகள் மற்றும் மேற்படி உரிமைகளை அமுல்படுத்துவதில் அரசுக்கு உரித்தான பொறுப்பும் விபரிக்கப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் தொடர்பாகக் காணப்படுகின்ற சமூக நிலைமையை ஆராயும்போது, சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரத்தொழில், சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்துவதை நோக்கக் கொண்டு, சர்வதேச இரகசிய வியாபாரம் அதிகரிப்பது பற்றித் தீவிர கவனம் செலுத்தி, ஆயுதப் போராட்டங்களில் சிறுவர்கள் பலாத்காரமாக யுத்த சேவையில் ஈடுபடுத்தப்படல் அல்லது ஆட்சேர்ப்புச் செய்வதை சர்வதேச குற்றமொன்றாக குறிப்பிட்டு 2000 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு, சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதைத் தடுத்தல் மற்றும் சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்துவதை தடுத்தல் ஆகிய உபவரைவுகள் உள்ளடக்கப்பட்டன.
உலகில் காணப்பட்ட இந்தப் போக்குடன் இலங்கை அரசும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் சமவாயத்தில் 1990 ஆம் ஆண்டு கைஒப்பமிட்டு தமது இணக்கப்பாட்டை தெரிவித்தது. 1991 யூலை மாதம் 12 ஆம் திகதி இது நிறைவேற்றப்பட்டது.

அதற்கமைய, இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வது தொடர்பாக 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டது. இதன் போது விடயங்களை ஆராய்ந்த மேற்படி குழு சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றின் தேவை தொடர்பிலான சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதற்கமைய 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நீதி அமைச்சரினால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இச்சட்டம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டது. 1990 யூன் மாதம் அதிகாரசபையின் தலைவர் மற்றும் நிருவாக சபை நியமனம் செய்யப்பட்டதை அடுத்து அதிகாரசபை இயங்க ஆரம்பித்தது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஆரம்பம் முதல் இன்று வரை சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களின்போது அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீளசமூகமயப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி நாட்டிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், 2004 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அபிவிருத்திக்காக 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலமும் அதிகாரசபைக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது. மேலும் 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளைத் தடுக்கும் சட்டத்தின் மூலமும் ஒரு பிள்ளை குடும்ப வன்முறைக்கு ஆளாகும் பட்சத்தில் அதிகாரசபைக்கு அறியக் கிடைக்கும்போது மூன்றாம் தரப்பினராக அதில் தலையிட முடியும்.
சிறுவர்களின் உச்சளவான நலனுக்காக செயற்படுவதற்கு சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை துரிதமாக மற்றும் முறையாக அறிக்கையிடுவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2010 யூலை 22 ஆம்

திகதி "1929" இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையானது 24 மணிநேரமும் இயங்கும் வகையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வளவில் தாபிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சமூகத்தில் மறைந்திருந்த சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதை அவதானிக்க முடிந்தது. இன்று இலங்கையின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதுடன், ஆலோசனைச் சேவைகளையும் இதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவர்களின் பாதுகாப்புக்காக இந்த ஆண்டிலும் தேசிய செயற்றிட்டங்களுக்கு அமைய தமது பணிகளை மேற்கொண்டுள்ளது.

## பிரதானசெயற்பணி

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பரந்தளவிலான செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

• சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும் அவ்வாறான துஷ்பிரயோகத்துக்கு ஆளாகின்ற சிறுவர்களை பாதுகாப்பதும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பான தேசிய கொள்கையொன்றை தயார்செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதும்.

• சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

• அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளானவர்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

• துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உள்ள உரிமைகள் தொடர்பாகவும், சிறுவர் நெறிபிறழ்வைத் தடுப்பதற்கான முறைமை பற்றியும் அறிவுறுத்தல்.

• சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கின்ற பணிக்கும், அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், தேவையான சகல வகையிலுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அந்தப்பணிகளுக்கு உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட, பிரதேச செயலாளர்களினதும் அரசாங்க, தனியார் துறையினரினதும், அமைப்புகளின் அறிவுரைகளை ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல்.

• சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான தேசிய கொள்கையை பயன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ரீதியான நிருவாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல்.

• சகல வகையிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துவதை ஒழுங்குபடுத்தல்.

• சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை ஒழுங்குபடுத்தல்.

• ஆயுத மோதல்களின் அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாக மனிதாபிமான அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வதும், அவர்களின் உடல் மற்றும் உளவியல் நலன்புரிக்கு நடவடிக்கை எடுப்பதும் உட்பட அவ்வாறான சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களை சமூகத்தில் மீள இணைத்துக்கொள்வதும்.

• குற்றங்கள் தொடர்பான புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர்களின் பாதுகாப்புக்கும் அரவணைப்புக்கும் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

• சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றுக் கொள்வதும் தேவையான சந்தர்ப்பங்களில் அந்த முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதும்.

• சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக மேற்கொள்கின்ற கடுமையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வது தொடர்பாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச சார்பற்ற அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குவதும் உதவி வழங்குவதும்.

• சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தேசிய தரவுக் கட்டமைப்பை தயார் செய்வதும், அதனை பேணிவருவதும்.

• சம்பந்தப்பட்ட அமைச்சுகள், வேறு நிறுவனங்களின் அலோசனைகளைப் பெற்று சிறுவர்களுக்கு சிறுவர் பாதுகாப்புச் சேவைகளை ஆற்றுகின்ற சகல சமய மற்றும் மத சார்பான நிறுவனங்களை கண்காணிப்புச் செய்வதும் அது தொடர்பான ஒழுங்குறுத்தல்களும்.

• சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துவதும் மேம்படுத்துவதும் ஒருங்கிணைப்புச் செய்வதும்.

• சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்கு தகவல்களை பெற்றுக்கொடுப்பதும் கல்வியை பெற்றுக்கொடுப்பதும்.

• சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்களை குறைப்பதற்காக சுற்றுலாத்துறை நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.

• சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்வதும் அதற்கான வசதிகளை செய்துகொடுப்பதும்.


• சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்திக் கொள்வதும், தடுப்பதும் அது தொடர்பாக வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைப்புகளைப் பேணி நடவடிக்கை மேற்கொள்வதும் தகவல்களை பரிமாற்றிக்கொள்வதும்.

## அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையகத்தில் பின்வரும் அலகுகள் இயங்கிவருகின்றன.

- நிருவாகம் மற்றும் மனித வளப்பிரிவு
- நிதிப்பிரிவு
- திட்டமிடல் மற்றும் தகவல் பிரிவு
    - திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் பிரிவு
    - தகவல் மற்றும் ஊடக பிரிவு
        - நூலகம்
- நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு
- உளவியல் சமூக பிரிவு
    - சட்டப்பிரிவு வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவுசெய்யும் அலகு
- சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவு
    - 1929 இலங்கை சிறுவர் தொலைபேசிச்சேவை
    - விசாரணை அலகு
    - மத்திய ஆவணக்காப்பகம்
- உள்ளகக் கணக்காய்வு பிரிவு
- விசேட பொலிஸ் விசாரணை பிரிவு

**2018 ஆண்டிற்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நிறுவன ஒழுங்கமைப்பு**



**2018 ஆம் ஆண்டிற்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி**

| இல. | பதவி | சம்பளக் குறியீடு | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | HM -2-1 | 01 | 01 | - |
| 02 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | HM -1-3 | 01 | - | 01 |
| 03 | பணிப்பாளர் - நிருவாகம் மற்றும் மனித வளம் | HM -1-1 | 01 | 01 | - |
| 04 | பணிப்பாளர் - நிதி | HM -1-1 | 01 | - | 01 |
| 05 | பணிப்பாளர் - சட்டம் | HM -1-1 | 01 | - | 01 |
| 06 | உளவியல் சிகிச்சை நிபுணர் | HM -1-1 | 01 | - | 01 |
| 07 | பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | HM -1-1 | 01 | 01 | - |
| 08 | பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | HM -1-1 | 01 | 01 | - |
| 09 | பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | HM -1-1 | 01 | - | 01 |
| 10 | உதவி பணிப்பாளர் - நிருவாகம் | MM -1-1 | 01 | 01 | - |
| 11 | உதவி பணிப்பாளர் - சட்டம் | MM -1-1 | 01 | 01 | - |
| 12 | உதவி பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | MM -1-1 | 01 | 01 | - |
| 13 | உதவி பணிப்பாளர் - உளவியல் | MM -1-1 | 01 | 01 | - |
| 14 | உதவி பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | MM -1-1 | 01 | 01 | - |
| 15 | உதவி பணிப்பாளர் - தகவல் மற்றும் ஊடகம் | MM -1-1 | 01 | - | 01 |
| 16 | உதவி பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | MM -1-1 | 01 | 01 | - |
| 17 | கணக்காளர் | MM -1-1 | 01 | 01 | - |
| 18 | உள்ளக கணக்காய்வாளர் | MM -1-1 | 01 | 01 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19 | பணிப்பாளர் சபை செயலாளர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 20 | நிருவாக அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 21 | நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 22 | கணக்கு அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 23 | புலனாய்வு அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 24 | தகவல் மற்றும் ஊடக அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 25 | திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 26 | ஆராய்ச்சி மற்றும் நலன்புரி அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 27 | மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்) | MA - 4 | 01 | - | 01 |
| 28 | மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) | MA - 4 | 01 | - | 01 |
| 29 | மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 25 | 21 | 04 |
| 30 | மாவட்ட உளவியல் சமூக அலுவலர் | MA - 3 | 25 | 14 | 11 |
| 31 | பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 360 | 293 | 67 |
| 32 | நிருவாக உதவியாளர் | MA - 3 | 01 | 01 | - |
| 33 | கணக்குகள் உதவியாளர் | MA - 3 | 03 | 02 | 01 |
| 34 | ஊடக உதவியாளர் | MA - 3 | 03 | 03 | - |
| 35 | நூலகர் | MA - 3 | 01 | 01 | - |
| 36 | திட்டமிடல் உதவியாளர் | MA - 3 | 01 | 01 | - |
| 37 | சட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 02 | 01 |
| 38 | புலனாய்வு உதவியாளர் | MA - 3 | 02 | 01 | 01 |
| 39 | ஆலோசனை உதவியாளர் | MA - 3 | 04 | 04 | - |
| 40 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 41 | வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் உதவியாளர் | MA - 3 | 01 | 01 | - |
| 42 | இணையத்தள | MA - 3 | 01 | - | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பரிசோதனை உதவியாளர் | | | | |
| 43 | சிகிச்சையளிக்கும் மருத்துவர் | MA - 3 | 03 | 02 | 01 |
| 44 | வீடியோ தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 01 | 01 | - |
| 45 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | MA – 2-1 | 15 | 10 | 05 |
| 46 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 02 | 02 | - |
| 47 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) | MA – 1-1 | 32 | 28 | 04 |
| 48 | சாரதி | PL-3 | 07 | 06 | 01 |
| 49 | செய்தி கொண்டுசெல்பவர் (தூதுவர்) | PL-1 | 01 | - | 01 |
| 50 | அலுவலக சிற்றூழியர் | PL-1 | 03 | 03 | - |
| 51 | அலுவலக தொழிலாளி | PL-1 | 02 | 01 | 01 |
| **மொத்தம்** | | | **527** | **415** | **112** |

2018 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது அபிவிருத்திக்கான 4 செயற்றிட்டங்களின் கீழ் இயங்கிவந்தது. தேசிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (ரூபா மில்லியன் 60), தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையை வலுவூட்டும் செயற்றிட்டம் (ரூபா மில்லியன் 30), 1929 24 மணிநேரமும் அமுலில் உள்ள சிறுவர் தொலைபேசிச் சேவை தொடர்பான செயற்றிட்டம் (ரூபா மில்லியன் 10) மற்றும் சிறுவர் பாதுகாப்புக்கான சமூக பாதுகாப்பு செயற்றிட்டம் (ரூபா மில்லியன் 20) என்ற வகையில் அவை அமுல்படுத்தப்பட்டன. இதற்கமைய ரூ.மி.120 ஆன தொகை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு நிதி ஏற்பாடுகளாக ஒதுக்கப்பட்டது.

## அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2018

### சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசியக் கொள்கை

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையைத் தயார் செய்வது 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் பிரதான செயற்பணியொன்றாகும். பகிரங்க பத்திரிகை அறிவித்தலொன்றை வெளியிட்ட பின்னர் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கைக்கு கிடைக்கப்பெற்ற பொது மக்களின் கருத்துக்கள் வரைவில் இணைக்கப்பட்டன. அதற்கு மேலதி-கமாக அதிகாரசபையின் பிரதேச மற்றும் மாவட்ட அலுவலர்களின் கருத்துக்களையும் மேலும் உட்புகுத்தவதற்கான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

### பாடசாலை பாடவிதானத்தில் வாழ்க்கைத் திறனை அறிமுகம் செய்தல்

கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் அதிகாரசபை ஆகியன இணைந்து பிள்ளையின் ஆரம்பக்கல்வி முதல் வாழ்க்கைத் திறனை அறிமுகம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. 2017 ஆம் ஆண்டில் 2 ஆம் 3 ஆம் தரத்திற்கு இந்த வாழ்க்கைத் திறனை அறிமுகம் செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் நோக்கமாக இருப்பது பிள்ளையினுள் உளவியல்சார் அறிவை கட்டியெழுப்புதல் மற்றும் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதாகும். தீர்மானம் மேற்கொள்ளல், பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளல், ஆக்கபூர்வமான சிந்தனை, தர்க்க ரீதியான சிந்தனை, ஆட்களுக்கு இடையிலான உறவு, சுய புரிந்துணர்வு, தயவு மனப்பான்மை, உணர்வு முகாமைத்துவம் மற்றும் அழுத்த முகாமைத்துவம் போன்ற விடயங்களின் ஊடாக சிறுவர்கள் கற்றுக்கொள்கின்றனர். இதற்குத் தேவையான ஆசிரிய பயிற்சிப் பாடநெறிகளைத் தயார் செய்வதற்கு தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதன்போது ஆசிரிய ஆலோசகர்களுக்கான கற்கை, கற்பித்தல் உதவிகளாக 03 வீடியோ தொகுப்புக்கள் 2017 ஆம் ஆண்டு தயார் செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவகத்தினால் தயார் செய்யப்பட்ட பாடவிதானங்கள் பற்றி ஆராயப்பட்டது. பயிற்சி உதவிகளாக தயார் செய்யப்பட்ட 03 வீடியோ தொகுப்புக்கள் கல்வி அமைச்சின் நெனச இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இப்பணி தொடர்பாக 09 மாகாணங்களினதும், கல்விப் பணிப்பாளர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டார்கள். தரம் 2 மற்றும் 3 இற்கு சிறுவர் பாதுகாப்பு பற்றிய விடயங்களை உள்ளடக்கிய துண்டுப்பிரசுரங்கள் 13,000 ஐ அச்சிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

**திடீர் அனர்த்த நிலைமைகளின் போது சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை உள்ளடக்கிய கையேட்டைத் தயார் செய்தல் (சிறுவர்களுக்கான உளவியல் சமூக முதலுதவி)**

வெள்ளம், சூறாவளி, மண்சரிவு, பூமி அதிர்ச்சி மற்றும் சுனாமி நிலைமைகள் காரணமாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அனர்த்த நிலைமை ஏற்பட முடியும். அவ்வாறான அனர்த்த நிலைமைகளின் போது சிறுவர்கள் கடும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். எனவே அனர்த்த நிலைமையின் போது சிறுவர்களை அரவணைப்புச் செய்வதை விசேட கவனத்துடன் மேற்கொள்ளல் வேண்டும். இங்கு முகாம்களில் சிறுவர்களின் உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிறுவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். இதனைக் கவனத்தில் கொண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் இணைந்து இவ்வாறான சந்தர்ப்பங்களில் நடவடிக்கை மேற்கொள்வதற்காக உளவியல், சமூக முதலுதவி உள்ளடங்கலாக கையேடொன்றைத் தயார் செய்ய ஆரம்பித்துள்ளது. இதன் நோக்கமாக இருப்பது சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், உளவியல் சமூக செயற்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு குடும்பத்திற்கும், பிள்ளைக்கும் இடையிலான தொடர்பை கட்டியெழுப்பல் மற்றும் சமுதாயத்தை வலுவூட்டுவதாகும். இதற்காக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்புடையதாகின்ற தகவல்கள் சேகரித்து முடிக்கப்பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து திடீர் அனத்த நிலைமைகளின்போது பின்பற்ற வேண்டிய சிறுவர் பாதுகாப்புக்கான வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்வதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வரைவை தயார் செய்வது தொடர்பில் இலக்கு நேர்முகக் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2018.09.21 ஆம் திகதி கேகாலை மாவட்ட அலுவலர்கள் 15 பேரைக் கொண்டதாக இந்த இலக்கு நேர்முகக் கலந்துரையாடலை நிறைவு செய்ய முடிந்தது. இதன் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கேகாலை மாவட்ட அலுவலர்கள், பிரதேச அலுவலர்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் உளவியல், சமூக அலுவலர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள், ஆலோசனை அலுவலர்கள், சமூக சேவைகள் அலுவலர்கள், அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினார்கள். இந்த வழிகாட்டல் தொகுப்பைக் கொண்ட கையேடு வரைவு செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்தல்**

சிறுவரின் உச்சளவான நலனுக்காக செயற்படும் போது சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் வாழும் சிறுவர்களின் அரவணைப்புத் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். அது தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் பாதுகாப்புச் சேவைகளை ஆற்றும் நிறுவனங்களுக்கான வழிகாட்டல் தொகுப்பு மற்றும் தரநியமங்களின் தொகுப்பைத் தயார் செய்வது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் தேசிய மட்டத்தில் ஒவ்வொரு சிறுவர் இல்லத்தினதும் (சிறுவர் அபிவிருத்தி நிலையம்) தரமானதன்மை மற்றும் தரப்படுத்தப்பட்ட செயன்முறையை உறுதி செய்தல் மற்றும் பாதுகாப்பானதும், சிறுவர்களுக்கு சார்பானதுமான சிறுவர் இல்ல (சிறுவர் அபிவிருத்தி நிலையம்) சேவையை மேம்படுத்துவதாகும். மாகாண நன்னடத்தை ஆணையாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றும் நடாத்தப்பட்டது. இதன் வரைவு தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது. அமைச்சவையின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.

**சாதாரண சிறுவர் பாதுகாப்பு பாடநெறியின் பயிற்றுவிப்பாளர்களுக்கான வழிகாட்டல் தொகுப்பை அச்சிடுதல் (Child Care NVQ 4)**

2016 ஆம் ஆண்டில் ரூ.மி. 50 ஆன தொகை சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்குவோரின் கடமைகளை தரப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் தொடர்பிலான தேசிய வழிகாட்டிக்கு இசைவாக சிறுவர் அரவணைப்பு சான்றிதழ் பாட-நெறி (NVQ 4) தயார் செய்யப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கமைய தொழில் பயிற்சி அதிக-ாரசபை (VTA) 5 மாவட்டங்களிலும், (கொழும்பு, களுத்துறை, கண்டி, காலி மற்றும் கிளிநொச்சி) தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபை NAITA}25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகை-யிலும் இந்தப் பாடநெறியை ஆரம்பித்து நடாத்தி வருகின்றன. இந்தப் பாடநெறி 12 மொடியுல்களைக் கொண்டுள்ளதுடன், இதற்கான பயிற்சிக் கையேடும் தயார் செய்யப்பட்டுள்ளது.

**சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகள் மற்றும் தடுப்பு இல்லங்களிலுள்ள சிறுவர்களுக்கு உளவியல் சமூக தலையீடு**

இந்த நிறுவனங்களில் சிறுவர்களுக்கு உடல் மற்றும் உளவியல் ரீதியாக நோக்கும் போது பாதுகாப்பு, போசனை வாழ்விடத்தை இழத்தல், பொருளாதார அசௌகரியங்களை எதிர்கொள்ளல் போன்ற சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளதுடன், அதனூடாக அவர்களின் அன்றாட வாழ்க்கையில் குணாம்சங்கள் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளன. மேலும் பாடசாலைக் கல்வி வீழ்ச்சியடைதல், சமூக எதிர்ப்பு நடத்தைகள் ஏற்படுதல், போதைவஸ்துப் பயன்பாட்டுக்கு பழக்கப்படுதல், எதிர்கால குற்றவாளிகளாக மாறுதல் போன்ற அச்சுறுத்தல்கள் அதிகரித்தல் மற்றும் ஆளுமை பாதிக்கப்படுதல் போன்ற சமூக சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. அவ்வாறே, மனஉளைச்சல், தனிமை, ஆளுமையில் முரண்பாடு ஏற்படுதல் மன அழுத்தம்,

**பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கான சாதகமான ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றிய கையேட்டை தயார் செய்தல்**

பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் திறமைகளை அபிவிருத்தி செய்யத் தேவையான வழிகாட்டல்களுக்கான கையேட்டைத் தயார் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம், குடும்பம் மற்றும் பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்யத் தேவையான அறிவு, மனப்பாங்கு மற்றும் திறமைகளை அபிவிருத்தி செய்தல், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு பெற்றுக் கொடுப்பது எதிர்பார்க்கப்படுகின்றது. பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கான சாகதமான ஒழுக்கக்கட்டுப்பாடு பற்றிய கையேட்டைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பருமட்டான ஒழுங்கமைப்பு மற்றும் உள்ளடக்கம் தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான சித்திர ஆக்கங்களும் வடிவமைத்து முடிக்கப்பட்டுள்ளன.

**சிறுவர்களுக்கு சாதகமான பாடசாலைச் சூழலை உருவாக்கல்**

பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களின் செயற்பாட்டின் மூலம் சிறுவர்களுக்கு சாதகமான பாடசாலை சூழலை உருவாக்குவது இதன் எதிர்பார்ப்பாகும். சிறுவர்களை சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வது பற்றிய அறிவு, புரிந்துணர்வு மற்றும் திறமைகளை பாடசாலை சமுதாயத்தில் மற்றும் சிறுவர்களில் வளர்த்தல் மற்றும் அதற்கு

அவர்களை வலுவூட்டுவதற்காக பாடசாலை மட்டத்திலான பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதன் மூலம் சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தல் அபிவிருத்தி செய்யப்படுகின்ற சூழலை பாடசாலையினுள் ஏற்படுத்துவதும், அதற்காக செயற்படுகின்ற பாடசாலை சமுதாயமொன்றை உருவாக்குவதும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இதன்போது பல்வேறு துறைகளின் ஊடாக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. கொத்தணி நிகழ்ச்சித்திட்டமாக சிறுவர் நட்புறவு பாடசாலை அங்கத்தவர்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆட்களின் திறன் அபிவிருத்தி பற்றிய பின்னாய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் இயங்கிவந்த பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் பற்றிய தகவல்களை தரவு முறைமையில் தரவேற்றம் செய்வது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் 1144 ஐ தாபிக்கத் தேவையான நிதி ஏற்பாடுகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

**ஜனபவுர தேசிய நிகழ்ச்சித்திட்டம் (சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்)**

இந்த நிகழ்ச்சித்திட்டமானது, கிராமிய, பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் சிறுவர் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அழுத்தம் கொடுக்கக்கூடிய தொண்டர் மக்கள் பிரதிநிதிகள் குழு ஏற்படுத்தப்படுகின்றது. சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் அது சம்பந்தமான சமூகப் பிரச்சினைகளைக் குறைப்பதற்காக கிராமிய மட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்வது நடைமுறைக்கு மிகவும் பொருத்தமான செயன்முறையாக உள்ளமை இதற்குக் காரணமாகும்.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு 2018.08.28 ஆம் திகதி குருநாகல் மாவட்டத்தின் 30 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் 1610 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த ஜனபவுர உறுப்பினர்கள் 5829 பேரின் பங்கேட்புடன் மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் 30 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மு.ப. 9.30 இற்கு ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், பி.ப. 4.30 இற்கு நிறைவு செய்யப்பட்டது. இவ் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒரே வடிவில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், ஒவ்வொரு இடத்திலிருந்தும் இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பிலான எழுத்துமூலமான மதிப்பீடும் பெற்றுக் கொள்ளப்பட்டது. இதில் 82%ஆனோர் இந்த நிகழ்ச்சித்திட்டம்“மிக்க நல்லது” எனக் கூறியிருந்தார்கள். இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக சனாதிபதி அலுவலகத்தின் “பிள்ளைகளைப் பாதுகாப்போம்” கருத்திட்டத்தின் மூலம் பெரும் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

இதற்காக சிறுவர் பாதுகாப்பு பற்றிய கையேட்டின் (சிறுவர் பற்றிய சட்டம், சிறுவர் பாதுகாப்பும், உங்களின் பொறுப்பும்) 9000 பிரதிகள் அச்சிடப்பட்டன. இக்கையேடு சனாதிபதி செயலகம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் வெளியிடப்பட்டது. இதற்கான நிதி ஏற்பாடுகள் சனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டது. இது தொடர்பில் 1929 சிறுவர் தொலைபேசி சேவை தொடர்பில் விழிப்புணர்வூட்டுவதற்காக சுற்றாடலுக்கு சாதகமான 2500 பைகளும் வடிவமைக்கப்பட்டன.

**தேசிய கல்வியியற் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்களை அறிவுறுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஆசிரிய தொழிலில் பிரவேசிப்பதற்கு உத்தேசித்துள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயில்கின்ற

ஆசிரிய மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிவையும் மற்றும் ஆற்றல்களையும் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக சிறுவர்கள் தொடர்பில் உணர்வுப்பூர்வமான மற்றும் அறிவுமிக்க ஆசிரியர் சமுதாயம் ஒன்றை உருவாக்குவதாகும். அதற்கமைய, 2018 ஆம் ஆண்டு தர்கா நகர், ஸ்ரீபாத, அட்டாளச்சேனை, நில்வளா, பிங்கிறிய, ஹாபிட்டிகம, புலதிசிபுர மற்றும் மஹாவலி தேசிய கல்வியியற் கல்லூரிகளில் மேற்படி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், இதன் மூலம் ஆசிரிய மாணவர்கள் 2686 பேர் விழிப்புணர்வூட்டப்பட்டார்கள்.

**சுகாதார தொழில்சார் வல்லுநர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

சுகாதாரத் தொழில்சார் வல்லுநர்களின் திறன் அபிவிருத்திக்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. சுகாதாரத் தொழில்சார் வல்லுனர்களை சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு துறைகளிலும் அறிவும், ஆற்றலும்மிக்கவர்களாக மாற்றியமைப்பதன் மூலம் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் மென்மேலும் உணர்வுப்பூர்வமான ஆட்களை உருவாக்கல், அரச அலுவலர் என்ற வகையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களின் போது அல்லது அவ்வாறான அச்சுறுத்தலான நிலைமையின் போது செயற்பட வேண்டிய முறை பற்றிய உரிய அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கினை அபிவிருத்தி செய்வதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. அதற்கமைய 2018 ஆம் ஆண்டில் பட்டப் பின் மருத்துவப் பட்டத்தைக் கற்றுவருகின்ற மருத்துவர்கள் மற்றும் சுகாதார மருத்துவ சேவை அலுவலகங்களில்கடமையாற்றுகின்ற அரசாங்க ஊழியர்களுக்காக இவ்வாறான 55 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் அறிவுறுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 2118 பேர் ஆகும்.

**சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான திறமைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்**

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற உடல்சார் தண்டித்தல், சிறுவர் விவாகம், கட்டாயக் கல்வி மற்றும் சிறுவர்கள் போதைவஸ்துக்களைப் பயன்படுத்த முற்படுதல் போன்ற இன்று சமூகத்தில் கலந்துரையாடப்பட்டு வருகின்ற தலைப்புக்கள் தொடர்பில் சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது இதன் நோக்கமாகும். அதற்கமைய, ஊவா மாகாணத்தில் கந்தகெட்டிய, ரீதிமாலியத்த, வெல்லவாய்,சியம்பலான்டுவ, கதிர்காமம் மற்றும் ஹாலிஎல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள் 07 ஐ மையமாகக் கொண்டு பிரதேச செயலாளர் பிரிவினுள் காணப்படுகின்ற சகல கிராம அலுவலர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் 07 நிகழ்ச்சித்திட்ங்கள் நடாத்தப்பட்டன. பயனாளிகளின் எண்ணிக்கை 700 பேர் ஆகும்.

**சிறுவர் ஊழியத்திற்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு "சிறுவர் ஊழியத்தை ஒழிப்போம்" எனும் தலைப்பின் கீழ் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

2018 ஆம் ஆண்டில் சிறுவர் ஊழியத்திற்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு ''சிறுவர் ஊழியத்தை ஒழிப்போம்'' எனும் தொணிப்பொருளின் கீழ் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது.

இதன் குறிக்கோள் பொருளாதார ரீதியாக சுரண்டல் மற்றும் அபாயகரமான தொழில்வாய்ப்புக்களில் பிள்ளைகள் ஈடுபடாதிருத்தல், சிறுவர்களின் சுகாதாரம் அல்லது உடல், உள, ஆன்மீக, தார்மீக அல்லது சமூக அபிவிருத்தியில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஏதேனும் செயற்பாடுகளிலிருந்து அவர்களை பாதுகாப்பதாகும். அதற்கமைய 2018 ஆம் ஆண்டில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 25 நடாத்தப்பட்டன. இதனூடாக பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் 1937 பேர் விழிப்புணர்வூட்டப்பட்டார்கள்.

**சர்வதேச சிறுமியர் தினத்தை முன்னிட்டு தோட்டத்துறை மற்றும் மீனவர் சமுதாயங்கள் சார்ந்து வாழும் சிறுமியரை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

2018 அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற சர்வதேச சிறுமியர் தினத்தை முன்னிட்டு கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, கேகாலை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் தோட்டத்துறையில் வாழும் சிறுமியரை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டத் தொடரொன்று அமுல்படுத்தப்பட்டது. அதன் கீழ் தோட்டத்துறையில் வாழும் சிறுமியருக்கு சுயதொழில் வாய்ப்புப் பயிற்சிகளை பெற்றுக் கொடுத்தல், சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுமியரின் உரிமை-களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் தோட்டத்துறை சமுதாயத்தினர் மற்றும் சிறுவர்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். சிறுவர்களின் ஆளுமைவிருத்தி, வாழ்க்கைத்திறன்களை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள், ஆலோசனை செயலமர்வுகளை நடாத்தல் மேலும், அச்சுறுத்தலான குடும்பங்கள் மற்றும் சிறுவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல், தோட்டத்துறையில் வாழும் பாடசாலைக்குச் செல்லும் வயதிலுள்ள போதிலும் வறுமை காரணமாக பாடசாலை பயணம் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை பாடசாலைமயப்படுத்துவதற்காக கல்வி உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல், தோட்டத்துறை பாட-சாலைகளில் பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுக்களைத் தாபித்தல் மற்றும் அவற்றை வலுவூட்டல், பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரமும், இணையத்தளமும், கேபில் தொலைக்காட்சிச் சேவைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் பற்றி விழிப்புணர்வூட்டல், அத்துடன் தோட்டங்களில் சிறுவர் பாதுகாப்பு செயல் வலையமைப்புக்களை வடிவமைத்தல், பிள்ளைகளின் வாசிப்பு பழக்கத்தை தூ ண்டுவதற்காக நூலகங்களை ஆரம்பித்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**கரையோர வலயங்களில் சிறுவர் பாதுகாப்புக்கான முன்னோடிக் கருத்திட்டம்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் கரையோர வலயங்களை மையமாகக் கொண்டுவாழும் சிறுவர்களுக்கு பாதுகாப்பான சாதகமான சூழலை உருவாக்கும் நோக்கத்துடன், 2016 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள முன்னோடிக் கருத்திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணியாக 2018 ஆம் ஆண்டில் 14 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இந்தக் கருத்திட்டத்திற்கு சமாந்தரமாக ஆலோசனை மற்றும் உளவியல் சமூக உதவிகள் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்களை சமர்ப்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டது. இதன் முக்கிய நோக்கமாக இருப்பது சிறுவர்களுக்கு நட்புறவான சூழலை கிராமத்தில் ஏற்படுத்துவதாகும். இதன்மூலம் மேற்கொள்ளும் அறிவித்தல் பலகைகள் தொடர்பிலான செய்திகளும் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**தோட்டத்துறையில் வாழும் சிறுவர்களின் அரவணைப்பை உறுதி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்**

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதன் முக்கிய நோக்கமாக இருப்பது, தோட்டத்துறையில் வாழும் குடும்பங்களை சிறுவர்களுக்குப் பாதுகாப்பான குடும்பங்களாக மாற்றியமைத்து அவற்றில் வாழும் சிறுவர்களை மகிழ்ச்சியுடன் வாழும் சிறுவர்களாக மாற்றியமைத்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களை தோட்டத்துறையில் உருவாக்குவதுமாகும். அதற்கமைய 2018 ஆம் ஆண்டில் அரசசார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்கள், தோட்டத்துறை சமுதாயத் தலைவர்களை விழிப்புணர்வூட்டும் 32 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், அதன் மூலம் 1013 பேர் பயனடைந்துள்ளார்கள்.


**ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சமவாயம் பற்றி சமுதாயத்தினரை விழிப்புணர்வூட்டல்**

சிறுவர் உரிமைகள் தொடர்பில் சமுதாயத்தினர் மத்தியில் குறைவான அறிவு மட்டமே காணப்படுகின்றது. ஒரு சிறுவருக்கு உரித்தாக வேண்டிய உரிமைகளை அங்கீகரிப்பதில் பெரியவர்கள் மத்தியில் குறைவான ஊக்கமே காணப்படுகின்றது. இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு சிறுவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முழுப் பக்கத்தைக் கொண்ட விசேட ஆக்கமொன்று மும் மொழிகளிலும் அரசாங்க வார இறுதிப் பத்திரிகைகளான சிலுமின, சன்டே ஒப்சேவர், தினகரன் வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன.

மேலும் 2018 உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர்களின் உரிமைகள் பற்றி பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை அறிவுறுத்துவதற்காக சுவரொட்டிப் போட்டியொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது. கல்வி அமைச்சின் சுயாதீன நடுவர் குழு இப்போட்டியை மதிப்பீடு செய்தது. இப்போட்டி பாடசாலை பிரிவு மற்றும் திறந்த பிரிவு என்ற வகையில் இரண்டு பிரிவுகளின் கீழ் நடாத்தப்பட்டது.

**(அகில இலங்கை)**


பாடசாலை பிரிவு




முதல் இடம்
எச்.மொஹமட் ரிசாத்
(சஹீரா கல்லூரி) –
அம்பாறை




இரண்டாம் இடம்
சனுக சந்தீர பஸ்நாயக்க (ஆனந்த
கல்லூரி) – கம்பஹா



மூன்றாம் இடம்
டபிள்யு.ஏ. கவீஷா கவ-
ிமினி (தேவி பாலிகா
வித்தியாலயம்) – கொழும்பு

**திறந்த பிரிவு (அகில இலங்கை)**




முதலாம் இடம்
டபிள்யு.எல். சுஜீவ ஜயசேன - இரத்தினபுரி



இரண்டாம் இடம்




மூன்றாம் இடம்

எல்.ஏ.எஸ். கருணாரத்ன – கண்டி

**சிறுவர் பாதுகாப்பு பற்றிய கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்துதல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பற்றிய நாடகங்களை அரங்கேற்றல்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தகவல் மற்றும் ஊடகப் பிரிவினால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு இசைவாக சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகள், பாதுகாத்தல் தொடர்பில் மக்களுக்குத் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் கல்வியூட்டல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2018 ஆம் ஆண்டிலும் பல்வேறு நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய, கல்விசார் கண்காட்சிகள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளில் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக அறிவுறுத்தும் கல்விக் கண்காட்சிக் கூடங்கள் மற்றும் நடமாடும் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இதன்போது சிறுவர் பாதுகாப்பு பற்றிய பல்வேறு வெளியீடுகளை விநியோகித்தல் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதும் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் ஆக்கபூர்வமானவாறு சிறுவர்கள் மற்றும் சமுதாயத்தினரை அறிவுறுத்துவதற்காக காட்சிப்படுத்துவதற்கு வீதி நாடகங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் 12 நடமாடும் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் நடாத்தப்பட்டன.














**சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

சுனாமி அனர்த்தத்தின் விளைவாக பெற்றோரை இழந்துள்ள 21 வயதிற்கு குறைவான ஒவ்வொரு பிள்ளைக்கும், இளைஞர்களுக்குமான நலன்புரி நடவடிக்கைகள் பற்றி இதன் கீழ் கவனம் செலுத்தப்படுகின்றது பெற்றோர் இருவரில் ஒருவரையேனும் இழந்துள்ள மற்றும் உயிர்வாழும் தாய் அல்லது தந்தைக்கு பாதுகாப்பதற்கு அல்லது அரவணைப்பதற்கு ஆற்றல் இல்லாத ஒவ்வொரு பிள்ளைக்கும், இளைஞருக்கும் 2005ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் மூலம் அரவணைப்புப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இதன் கீழ் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான கெப்பகரு பெற்றோர் பாதுகாவலர் அரவணைப்பு நடவடிக்கைகள், பின்னாய்வு நடவடிக்கைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் 45 பேருக்கு ஆண்டு முழுவதிலும் கல்வி உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

**சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சிகளை வீடியோ ஒளிப்பதிவு செய்தல்**

சிறுவர் துஷ்பிரயோகங்கள் காரணமாக பாதிக்கப்படுகின்ற சிறுவர்களின் சாட்சிகளை வீடியோகாட்சிகளாக ஒளிப்பதிவு செய்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் விசேட அலகொன்று இயங்கிவருகின்றது. 1999ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சாட்சிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு அமைய துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியிருக்கின்ற ஒரு சிறுவரின் சாட்சியை வீடியோ ஒளிப்பதிவு செய்து அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இதன்மூலம் இடமளிக்கப்பட்டுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த ஆண்டில் இவ்வாறான 126 சாட்சிகளை ஒளிப்பதிவு செய்துள்ளது. மேலும் கோரிக்கை விடுக்கப்பட்ட நீதிமன்றங்களுக்கு வீடியோ சாட்சிகளின் 71 பிரதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

**சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்குகின்ற மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களை (சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) கண்காணிப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்**

சிறுவர்களின் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக தாபிக்கப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இன்று பல்வேறு நடவடிக்கைகளின் ஊடாக அந்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள செயற்பட்டு வருகின்றது. 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் (14) க பிரிவுக்கு அமைய சிறுவர்களுக்கு சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்குகின்ற சகல சமய மற்றும் அறக் கட்டளை நிறுவனங்களையும் (சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்துவது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் இல்லங்களில் வாழும் சிறுவர்களுக்கு உச்சளவில் நலன்புரியைச் செய்துகொடுப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் சிறுவர் இல்லங்களை கண்காணிப்புச் செய்யும் பணி நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டது. இதன் நோக்கமாக இருப்பது, சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்குகின்ற அறக்கட்டளை நிறுவனங்களை (சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) கண்காணிப்புச் செய்தல் மற்றும் குறித்த தீர்வுகளைத் தேடிப் பெற்றுக் கொள்வது தொடர்பில் சம்பந்தப்பட்ட சகல நிறுவனங்களுடனும் இணைந்து கூட்டுக் கண்காணிப்பு அணுகுமுறையின் கீழ் மென்மேலும் வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் மேற்கொள்ளல், இல்லமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்கின்ற மென்மேலும் பாதுகாப்பான நிறுவனச் சூழலை உருவாக்குதல் மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்தல் போன்றனவாகும். 2018 ஆம் ஆண்டில் நாடு முழுவதிலும் உள்ள 322 சிறுவர் இல்லங்கள் கண்காணிப்புச் செய்யப்பட்டன.

**உளவியல் சுகாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்குதல்.**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உளவியல் சமூகப் பிரிவுக்கு சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தருகின்ற பிள்ளைகளுக்கு மற்றும் உளவியல் உதவிகளை எதிர்பார்க்கின்ற பிள்ளைகளுக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுக்க இதனூடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஆண்டில் சிறுவர்கள் 126 பேருக்கு இவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டன.

**சிறுவர் துஷ்பிரயோகங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற சிறுவர்களுக்கு உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்வி வசதிகளைச் செய்துகொடுத்தல்**

சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற சிறுவர்களை இனங்கண்டு அவர்களுக்கு கல்வி வசதிகள் செய்துகொடுக்கப்படுகின்றன. சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற சிறுவர்களுக்கு, யாவருக்கும் கல்வி எனும் நிலைபேறான அபிவிருத்தித் தொணிப்பொருளின் கீழ் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. கல்விக் கட்டளைச்சட்டத்தின் கட்டாயக்கல்வி ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும். அதற்கமைய, இந்த ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுவர்கள் சுமார் 1000 பேருக்கு கல்வி உதவிகள் வழங்கப்பட்டன.

**திடீர் அனர்த்த நிலைமைகளுக்கு ஆயத்தமாவதும், விழிப்புணர்வூட்டுவதும்**

திடீர் அனர்த்தங்களின் போது சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு அதிகாரசபையின் மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களுக்குத் தேவையான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்குசார் அபிவிருத்தியைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் இவ்வாறான நிலைமைகளின் போது சிறுவர்களைப் பாதுகாத்துக் கொள்வது இதன் நோக்கமாகும். 2018 ஆம் ஆண்டில் மாவட்ட, பிரதேச மற்றும் தலைமை அலுவலக அலுவலர்களைக் கொண்டதாக திடீர் அனர்த்தச் சேவைக் குழுவொன்றை ஒழுங்கமைக்கப்பட்டது. இந்த ஆண்டில் இதன் கீழ் 01 நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

**அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குறுத்துவதும், மதிப்பீடு செய்வதும்**


தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தல் மற்றும் மதிப்பீடு செய்வது இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் மூலம் அதிகாரசபையின் மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களுக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவத்துக்குத் தேவையான திறன்கள் விருத்தி செய்யப்படுவதுடன், நிகழ்ச்சித்திட்டங்களுக்கு முன்மதிப்பீடு மற்றும் பின்னாய்வு முறையியல்களும் அமுல்படுத்தப்படுகின்றன. 09 மாகாணங்களினதும் அலுவலர்கள் அனுப்பிவைக்கின்ற அறிக்கைகளிலிருந்து ஒழுங்குறுத்தல் மற்றும் மதிப்பீடுகள் மாதாந்தம் மேற்கொள்ளப்படும். 2018 ஆம் ஆண்டில் 09 மாகாணங்கள், 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இவ்வாறான 09 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.


**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய தகவல் இணையத்தளத்தை வடிவமைத்தல்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் www.childprotection.gov.lkமற்றும் தகவல் இணையத்தளமான www.youthink.lk என்ற பெயரில் இயங்கிவருகின்ற சிறுவர் பாதுகாப்பு பற்றிய தகவல்களை உள்ளடக்கிய இணையத்தளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்து அவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கிக் கொடுப்பது தொடர்பிலான தகவல்கள் மேற்படி புதிய

இணையத்தளத்தில் சிறுவர்களுக்கு நட்புறவான முறையில் உட்புகுத்தப்பட்டுள்ளன. மேற்படி இணையத்தளங்களை இற்றைப்படுத்துவது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தகவல் மற்றும் ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. உத்தியோகபூர்வ இணையத்தளத்தை இற்றைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




தகவல் இணையத்தளம் -

www.youthink.lk

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நூலகத்தை அபிவிருத்தி செய்தல்.


2016 ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு புதிய நூலகர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார் என்பதுடன், சிறுவர் பாதுகாப்பு விடயப்பரப்பு தொடர்பில் ஆராய்வதற்கான நூலகமொன்றை வடிவமைக்கத் தேவையான பல நடவடிக்கைகள் இக்காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக அதிகாரசபைக்கு வருகைதருகின்ற ஆட்களுக்கு மிகவும் இலகுவாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு புதிய நூலக வளவை ஒழுங்குபடுத்துவதற்கான திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது பொறியியல் பணிகள் பற்றிய மத்திய ஆலோசனைப் பணியகத்தினால் இதன் ஒழுங்கமைப்பு வரைபடம் தயார் செய்யப்பட்டதுடன், அடுத்துவரும் ஆண்டுகளில் இந்த நூலக வளவை ஒழுங்கமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு நூலகத்தை தாபிப்பதன் முக்கிய நோக்கமாக இருப்பது உச்சளவிலான தரத்தைக் கொண்ட தகவல் சேவைகள் மற்றும் தகவல் மூலங்களைப் பெற்றுக்கொடுத்து

சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான ஆராய்ச்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் சூழலை உருவாக்குவதாகும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு வருகைதருகின்ற ஆராய்ச்சியாளர்கள், அலுவலர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் புத்தகங்களை ஆராய்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல், கல்விமான்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்குத் தகவல்களைப் பெற்றுக் கொடுப்பது அதிகாரசபையின் நூலகரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.




பொறியியல் பணிகள் பற்றிய மத்திய ஆலோசனைப் பணியகத்தினால் புதிய ஆய்வு நூலகத்திற்காக வடிவமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள வரைபடம்

## சிறுவர் பாதுகாப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டல் தொகுப்பு தொடர்பில் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்றுவித்தல்

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் கொள்கை திட்டமிடல் அமைச்சு, பிரதம அமைச்சர் அலுவலகம், சிறுவர் செயலகம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையில் சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்கான வழிகாட்டல் தொகுப்பு வரைவு செய்யப்பட்டுள்ளது. இதன் நோக்கமாக இருப்பது தேசிய மட்டத்தில் பகல்நேர அரவணைப்பு நிலையங்கள் அனைத்தும் தரனமானதாகவும், உரிய தரநியமங்களைக் கொண்டுள்ளதையும் உறுதி செய்தல் மற்றும் தொழில்சார் மற்றும் பாதுகாப்பான பகல்நேர அரவணைப்புச் சேவையை மேம்படுத்துவதாகும். இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதன் 5000 பிரதிகளை அச்சிடத் தேவையான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### இள வயது திருமணத்தை தடுப்பதற்காக மாவட்ட மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் இது தொடர்பிலான விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் அமுல்படுத்தப்படவுள்ளது. இதன் நோக்கமாக இருப்பது தகவல் சாட்சிகளின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரு சுகாதார மருத்துவ அலுவலர் பிரிவு தொடர்பில் இளவயதுத் திருமணத்தைக் குறைப்பதற்கான கூட்டு அணுகுமுறையைக் கொண்ட முறையான நிகழ்ச்சித்திட்டமொன்றை தாபித்தல் மற்றும் அதன் பயன்களை சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்வதாகும். இந்த ஆண்டில் 19 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன

### சிறுவர் ஆட்கடத்தலில் காணப்படுகின்ற சிக்கல்களை ஆக்கபூர்வமான முறையில் புரிந்துகொள்ளல் மற்றும் மேற்படி பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் சமூகமயப்படுத்தல் பற்றிய கையேட்டை வடிவமைத்தல்

இது கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டப் பீடத்தின் மனித உரிமைகள் கற்கை மையம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரயுடன் இணைந்து மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டமாகும். இலங்கையில் இடம்பெறுகின்ற சிறுவர் ஆட்கடத்தலை இனங்காணல், அறிக்கையிடல், விசாரணைகளுக்குத் தேவையான கருவிகளை ஆயத்தப்படுத்துவது இதன் நோக்கமாகும். இதற்காக கொழும்பு பல்கலைக் கழகமும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையும் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளதுடன், இது தொடர்பிலான பாடவிதானம் அபிவிருத்தி செய்யப்பட்டு அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கையேடு மற்றும் கருவிகளும் தயார் செய்யப்படவுள்ளன.

### தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 (ஈ). (ஐ) மற்றும் (ட) பிரிவுகளுக்கு அமைய சிறுவர் துஷ்பிரயோகத்தைக் குறைப்பது தொடர்பில் மக்களுக்குத் தகவல்களைப் பெற்றுக் கொடுப்பது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.



அதற்கமைய, சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பில் பொது மக்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தகவல் மற்றும் ஊடக அலகு நடவடிக்கை மேற்கொள்கின்றது. இதன் போது தேவையானவாறு சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், ஸ்ரிக்கர், நூல்கள் உட்பட வேறு அச்சு வெளியீடுகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிக்கை விவரண நிகழ்ச்சிகள், வீடியோ உட்பட வேறு இலத்திரனியல் வெளியீடுகளும் பெற்றுக் கொடுக்கப்படும். இந்த ஆண்டில் அதிகாரசபையின் பல்வேறு வெளியீடுகள் சுமார் 76,384 விநியோகிக்கப்பட்டுள்ளன.

### வெகுசன ஊடக ஒருங்கிணைப்பு


தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
National Child Protection Authority

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 (ஈ) மற்றும் (ஐ) பிரிவுகளுக்கு அமைய சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்குத் தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் பிரதான ஊடகமான வெகுசன ஊடகங்களினூடாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செய்திகளை சமூகமயப்படுத்துவதை ஒருங்கிணைப்புச் செய்வது தகவல் மற்றும் ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய,பல்வேறு தலைப்புக்களின் கீழ் 2018 ஆம் ஆண்டில் 47 ஊடக அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

## சிறுவர் துஷ்பிரயோகம் ரூசிறுவர் சந்தேக நபர்கள் பற்றி அறிக்கையிடும் போது சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக ஊடகவியலாளர்கள் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பான தேசிய வழிகாட்டல் தொகுப்பு

ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் மூலம் உலகில் உள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தாக வேண்டிய உரிமைகள் மற்றும் அவ்வுரிமைகளை அமுல்படுத்துவதில் அரசுக்கு உரித்தான பொறுப்புக்களும் பரந்தரளவில் விபரிக்கப்பட்டுள்ளன. இலங்கை 1991 ஆம் ஆண்டில் மேற்படி சமவாயத்திற்கு ஏற்று அங்கீகரித்ததுடன், சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள இணக்கத்தைத் தெரிவித்துள்ளது. இதற்கமைய சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான தகவல்களை சமூகமயப்படுத்தும் பணியின்போது ஊடகங்கள் விசேடமானதொரு செயற்பணியை ஆற்றமுடியும்.

எனினும் இன்று சிறுவர் துஷ்பிரயோகங்கள், சிறுவர் சந்தேக நபர்கள் பற்றி அறிக்கையிடும் போது ஊடகவியலாளர்களின் வகிபாகம் சிக்கலானதாக மாறியுள்ளது. ஊடக நன்னெறிகளுக்கு புறம்பாக செயற்படுகின்ற சந்தர்ப்பங்களையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. குறிப்பாக சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய செய்திகளை அறிக்கையிடுவதன் மூலம் பாதிக்கப்பட்டுள்ள தரப்பினர் மீண்டும் மீண்டும் சமூகத்தின் முன் பாதிக்கப்படுகின்றார்கள். இவ்விடயங்களைக் குறைத்துகொள்வதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையும், அரசாங்க தகவல் திணைக்களமும் இணைந்து தேசிய கல்விமான்கள் குழுவொன்றின் வழிகாட்டல்களின் கீழ் சானதிபதி செயலகத்தின் ‘சிறுவர்களைப் பாதுகாப்போம்’' நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைய இந்தத் தேசிய வழிகாட்டல் தொகுப்பின் இறுதி வரைவை 2018 ஆம் ஆண்டில் தயார் செய்துள்ளன.

## 2018 சர்வதேச சிறுமியர் தின தேசிய வைபவம்

சர்வதேச சிறுமியர் தினம் அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி கொண்டாடப்படுவதுடன், மேற்படி தினத்தை முன்னிட்டு தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்று, 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 (ட) பிரிவின் பிரகாரம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு மற்றும் Plan International Sri Lankaநிறுவனம் ஆகியன இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டது. 2018.10.11 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் லோடஸ் மண்டபத்தில் இந்த தேசிய வைபவம் நடாத்தப்பட்டது.

மேலும் கல்வி அமைச்சின் சிபாரிசுகளுக்கு அமைய 2018 ஆம் ஆண்டு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விசேட திறமைகளை வெளிப்படுத்திய பாடசாலை மாணவிகள் 05 பேரைப் பாராட்டும் வகையில் “திறிய தியனிய 2018” விருது மற்றும் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன. இதன்போது விளையாட்டுத்துறை, புதிய கண்டுபிடிப்புக்கள், அழகியற்கலை, விசேட தேவைகளைக் கொண்ட சிறுவர்கள் போன்ற துறைகளில் 18 வயதுக்குக் குறைவான சிறுமியர் 5 பேர் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டு பாராட்டப்பட்டார்கள்.

அரசியல்துறையில் பிரபல பேராசிரியர் திருமதி கமலா லியனகே அவர்களினால் சிறுமியர் தினத்தை முன்னிட்டு விசேட விரிவுரையொன்றும் நடாத்தப்பட்டதுடன், இந்தத் தேசிய நிகழ்ச்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பாடசாலைகளில் 10 ஆம் தரத்தில் கல்வி பயிலும் சிறுமியர் மற்றும் ஆண் பிள்ளைகள் 75 பேர் பங்கேற்கச் செய்யப்பட்டார்கள்.













**சிறுவர் பாதுகாப்பு பற்றிய தகவல்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்ட, நாட்டின் முதலாவது பஸ் தரிப்பு நிலையத்தை திறந்துவைத்தல்.**

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தகவல்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்ட நாட்டின் முதலாவது பஸ்தரிப்பு நிலையத்தை திறந்துவைக்கும் நிகழ்வு இந்த ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு விசேட பணியாகும்.

இந்த பஸ்தரிப்பு நிலையம் மாதிவெலயில் அமைந்துள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமை அலுவகத்திற்கு முன்புறமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன்,சிறுவர் உரிமைகள் பற்றியும், சிறுவர் விவாகத்தைத் தடுத்துக் கொள்வது பற்றியும், 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை பற்றியும் தகவல்களைக் கொண்டதாக இந்த பஸ் தரிப்பு நிலையம் வடிவமைக்கப்பட்டுள்ளது. சிறுவர் துன்புறுத்தலை ஒழிப்பதற்காக சமுதாயம் மேற்கொள்ள வேண்டிய செயற்பணி பற்றியும் இதில் தகவல்கள் உள்ளடங்குகின்றன. துஷ்பிரயோகங்களிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்வது பற்றி மக்களை அறிவுறுத்தல் மற்றும் இவ்விடயம் தொடர்பில் சமூகத்தில் கலந்துரையாடலொன்றை உருவாக்குவதும் இதன் மற்றொரு நோக்கமாகும்.

இந்த பஸ்தரிப்பு நிலையத்தை வடிவமைக்கப் பயன்படுத்தப்பட்டிருப்பது 2017 ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட அகில இலங்கை சுவரொட்டிப் போட்டியின் கம்பஹா மாவட்டத்தில் முதல் இடத்தை வென்ற சித்திரமாகும் என்பதுடன், இதனை ஜாஎல கிறித்துராஜ வித்தியாலயத்தின் 10 ஆம் தரத்தைச் சேர்ந்த மாணவன் டி.எம். நிர்மித்த திசும் திசாநாயக்க வடிவமைத்திருந்தார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த பஸ் தரிப்பு நிலையத்திற்கான நிதி அனுசரணை Save the Childrenநிறுவனத்தினால் வழங்கப்பட்டதுடன் சமூக பாதுகாப்புச் செயற்றிட்டத்திற்கு அமைய இது நிர்மாணிக்கப்பட்டது.



**1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் “சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய பொது மக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பித்தல்” என்பதை மென்மேலும் விளைதிறன்மிக்கதாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் மாற்றியமைப்பதற்காக 1929 இலங்கைச் சிறுவர் உதவித் தொலைபேசி சேவை 2010 ஜூலை 22ஆந் திகதி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கட்டிடத்தொகுதியில் தாபிக்கப்பட்டது. இது சிறுவர் துஷ்பிரயோகங்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல் மற்றும் அவற்றுக்கு துரித நடவடிக்கை மேற்கொள்வதற்கான முன்னோடி பொறிமுறையாக உள்ளது. சமூகத்தில் மறைந்து காணப்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை அறிக்கையிடுகின்ற போக்கு இதன்மூலம் அதிகரித்துள்ளது.

கட்டணம் அறவிடாது 24 மணிநேரமும் இயங்கி வருகின்ற இச் சேவைக்கு அழைப்பு விடுப்பதன் மூலம் எவரும் சிறுவர்கள் பற்றி எழுகின்ற சிக்கல்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை செய்வதற்கும், ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதன்மூலம் ஆலோசனை சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். இந்த சேவை பிரதானமாக சிறுவர்களுக்கு ஒதுக்கப்பட்டதாக உள்ள போதிலும், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் சிறுவர்களுக்கு பாதுகாப்பை வழங்குகின்ற பெரியவர்களுக்கு, சிறுவர்கள் தொடர்பாக அவர்களுக்கு உள்ள சிக்கல்கள் மற்றும் சிறுவர்களை வளர்ப்பதில் உள்ள நடைமுறைகள் போன்றன பற்றி

கலந்துரையாடுவதற்கும் இந்த சேவையை பயன்படுத்த முடியும். 2018ஆம் ஆண்டில் 1929 தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்துள்ள தொலைபேசி அழைப்புக்களின் எண்ணிக்கை 140,903 ஆகும் என்பதுடன் இவற்றில் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 8690 ஆகும்

**சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள்**

சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள் தேசிய சிறுவர் அதிகாரசபைக்கு கிடைக்கும் பல்வேறு முறைகள் காணப்படுகின்றன.

01. 1929 எனும் இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை ஊடாக கிடைக்கும் முறைப்பாடுகள்.

02. அதிகாரசபைக்கு வருகைதந்து சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள்.

03. கடிதம் மூலம் கிடைக்கின்ற முறைப்பாடுகள்.

04. மின்னஞ்சல் அல்லது சைபர் கண்காணிப்பு மூலம் கிடைக்கின்ற தகவல்கள்.

இவ்வாறு கிடைக்கின்ற அனைத்து முறைப்பாடுகளும் துரிதமாக விசாரிக்கப்படுவதுடன் முறைப்பாட்டின் தன்மைக்கு அமைய அவை வகைப்படுத்தப்படுகின்றன. இந்த ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைத்திருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 9512 ஆகும். அதற்கமைய 2018 ஆம் ஆண்டு கிடைத்துள்ள முறைப்பாடுகள் துஷ்பிரயோகங்களின் தன்மைக்கு அமைய மற்றும் மாவட்ட ரீதியாக கீழே தரப்பட்டுள்ளன.

**2018 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை (மாவட்ட ரீதியாக)**

| | மாவட்டம் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கொழும்பு | 1330 |
| 02 | களுத்துறை | 540 |
| 03 | கம்பஹா | 1066 |
| 04 | கண்டி | 420 |
| 05 | மாத்தளை | 210 |
| 06 | நுவரெலியா | 168 |
| 07 | காலி | 617 |
| 08 | மாத்தறை | 346 |
| 09 | ஹம்பாந்தோட்டை | 361 |
| 10 | யாழ்ப்பாணம் | 207 |
| 11 | மன்னார் | 69 |
| 12 | வவுனியா | 131 |
| 13 | முல்லைத்தீவு | 98 |

| | | |
|---|---|---|
| 14 | கிளிநொச்சி | 104 |
| 15 | மட்டக்களப்பு | 189 |
| 16 | அம்பாறை | 229 |
| 17 | திருகோணமலை | 137 |
| 18 | குருநாகல் | 823 |
| 19 | புத்தளம் | 440 |
| 20 | அநுராதபுரம் | 434 |
| 21 | பொலனறுவை | 246 |
| 22 | பதுளை | 237 |
| 23 | மொனராகலை | 224 |
| 24 | இரத்தினபுரி | 537 |
| 25 | கேகாலை | 349 |
| | ***மொத்தம்*** | **9,512** |

**2018 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் தன்மைக்கு அமைய வகைப்படுத்தல்**

| | **முறைப்பாடுகளின் தன்மை** | **முறைப்பாடுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | சட்டபூர்வமல்லாதவாறு தடுத்துவைத்திருப்பதை தடை செய்தல் | 02 |
| 02 | சிறுவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற ஆபாச வெளியீடுகள் மற்றும் காட்சிப்படுத்தல் | 15 |
| 03 | சிறுவர்களை பிச்சை எடுக்கச் செய்தல் அல்லது ஆட்கடத்தல் | 315 |
| 04 | மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை வியாபாரம் செய்வதற்கு பிள்ளைகளை வாடகைக்குப் பெறல் அல்லது சேவையில் ஈடுபடுத்தல் | 40 |
| 05 | 12 வயதுக்கு குறைவான ஒரு பிள்ளை, பெற்றோர் அல்லது பிள்ளையின் பாதுகாவலரான ஆளொருவரினால் நீக்கம் செய்யப்படல் அல்லது கைவிடப்படல் | 03 |
| 06 | பிள்ளைகளை சித்திரவதைக்கு ஆளாக்குதல் | 2,413 |
| 07 | பாலியல் துன்புறுத்தல் | 555 |
| 08 | சட்டரீதியான பாதுகாவலரிடமிருந்து அகற்றல் | 120 |
| 09 | கடத்திச் செல்லல் | 45 |
| 10 | சிறுவர் பாலியல் சுரண்டல் | 04 |
| 11 | ஆட்களை வியாபாரம் செய்தல் | 125 |
| 12 | ஒரு சிறுவனை தூண்டுவதற்காக நச்சரித்தல் | 15 |
| 13 | பெண்களை வன்புணர்தல் | 311 |
| 14 | விபச்சாரம் | 01 |
| 15 | இயற்கைக்கு முரணான தவறுகள் | 01 |
| 16 | ஆட்களுக்கு இடையே கடும் ஒழுங்கீனமான செயற்பாடுகள் | 07 |
| 17 | கடும் பாலியல் துஷ்பிரயோகம் | 375 |
| 18 | பாரபட்சம் காட்டல் | 536 |

| | | |
|---|---|---|
| 19 | சிறுவர் ஊழியம் | 262 |
| 20 | கட்டாயக்கல்வி | 1267 |
| 21 | குடும்ப வன்முறை | 104 |
| 22 | சிறுவர் துர்நடத்தை | 374 |
| 23 | வேறு | 2,622 |
| | ***மொத்தம்*** | **9,512** |

**சட்டரீதியான பணிகள்**

துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்களை பாதுகாத்தல், அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழிப்பதற்கான சட்டரீதியான, நிருவாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல், சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான சட்டங்களை அமுல்படுத்த ஆலோசனை வழங்குதல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான சகல புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஒழுங்குபடுத்தல் அது சம்பந்தமாக நீதிமன்றங்களில் ஆஜராதல் போன்ற பணிகள் சட்டப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன. இதன்போது அதிகாரசபையின் சட்டத்திற்கு மேலதிகமாக, பின்வரும் சட்டங்களுக்கு ஏற்புடையவாறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2005ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டம்

- 2005 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க குடும்ப வன்முறைகளை தடுப்பதற்கான சட்டம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் இயங்கிவருகின்ற சட்டப்பிரிவினால் 2018 ஆம் ஆண்டில் சட்ட ஆலோசனை வழங்குவதன் கீழ் தொலைபேசி மூலம் 536 மற்றும் சேவைபெறுநர்கள் 200 பேர் அதிகாரசபைக்கு வருகைதந்து சட்ட ஆலோசனைகளைப் பெற்றுச் சென்றுள்ளார்கள். மேலும் இந்த அலகின் அலுவலர்கள் 20 தடவைகள் வழக்குகளில் ஆஜராகியுள்ளனர். 59 கூட்டங்களிலும் இந்த அலகின் அலுவலர்கள் பங்கேற்றுள்ளனர்.

**2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டத்திற்கு அமைய சட்டப் பிரிவின் பங்களிப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை**

| **நீதிமன்றம்** | **வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|
| பத்தரமுல்லை சிறுவர் நீதிமன்றம் | 04 |
| காலி நீதவான் நீதிமன்றம் | 05 |
| மாத்தறை நீதவான் நீதிமன்றம் | 10 |
| ஹம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் | 19 |
| தங்காலை நீதவான் நீதிமன்றம் | 01 |
| வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றம் | 02 |
| பலபிட்டி நீதவான் நீதிமன்றம் | 11 |
| களுத்துறை நீதவான் நீதிமன்றம் | 01 |
| மொத்தம் | 53 |

**சட்டப் பிரிவின் பங்களிப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை**

| **நீதிமன்றம்** | **வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|
| தெஹிஅத்தகண்டிய நீதவான் நீதிமன்றம் | 03 |
| ஹங்கொடவில நீதவான் நீதிமன்றம் | 03 |
| ஹிங்குரக்கொட நீதவான் நீதிமன்றம் | 01 |
| மாவனெல்ல நீதவான் நீதிமன்றம் | 02 |
| குளியாப்பிட்டி நீதவான் நீதிமன்றம் | 02 |
| உச்ச நீதிமன்றம் | 03 |
| பத்தரமுல்லை சிறுவர் நீதிமன்றம் | 06 |
| மொத்தம் | 20 |

**சட்டப் பிரிவு, சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் வேறு விசாரணை நிறுவனங்களின் முன் ஆஜரான தடவைகளின் எண்ணிக்கை**

| **நிறுவனம்** | **ஆஜரான எண்ணிக்கை** |
|---|---|
| தொழில் திணைக்களம் | 01 |
| மனித உரிமைகள் ஆணைக்குழு | 03 |
| மொத்தம் | 04 |

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் சட்டப் பிரிவின் பங்களிப்பு**

1929 இலங்கை சிறுவர் தொலைபேசிச் சேவைக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள், தபால் மூலம் மற்றும் அதிகாரசபைக்கு நேரடியாக வருகைதந்து சேவைபெறுநர்கள் சமர்ப்பிக்கின்ற முறைப்பாடுகள் என்ற வகையில் நாளாந்தம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு சிறுவர்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் அறிக்கையிடப்படுகின்றன. அவ்வாறு கிடைக்கின்ற முறைப்பாடுகள் அதிகாரசபையின் சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவினால் அதிகாரசபையினுள் இயங்கிவருகின்ற ஏனைய பிரிவுகளான சட்டப் பிரிவு, விசாரணைப் பிரிவு, உளவியல் சமூகப் பிரிவு மற்றும் விசேட பொலிஸ் பிரிவு ஆகிய பிரிவுகளிடம் குறித்த முறைப்பாடுகளின் வகைப்படுத்தலுக்கு அமைய சமர்ப்பிக்கப்படும்.

அதற்கமைய, சிறுவர் ஊழியம், கட்டாயக்கல்வி மற்றும் கல்வி சார்ந்த சிக்கல்கள் மற்றும் பொறுப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான முறைப்பாடுகள் சட்டப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டில் சட்டப் பிரிவிடம் 1670 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவை மாவட்டங்களின் அடிப்படையில் பின்வருமாறாகும்.

| **மாவட்டம்** | **2018 ஆம் ஆண்டு சட்டப் பிரிவுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகள்** |
|---|---|
| அம்பாறை | 48 |
| அநுராதபுரம் | 71 |
| பதுளை | 55 |
| மட்டக்களப்பு | 47 |
| கொழும்பு | 170 |
| காலி | 126 |
| கம்பஹா | 178 |
| ஹம்பாந்தோட்டை | 52 |
| யாழ்ப்பாணம் | 49 |
| களுத்துறை | 92 |
| கண்டி | 62 |
| கேகாலை | 56 |
| கிளிநொச்சி | 13 |
| குருநாகல் | 149 |
| மன்னார் | 15 |
| மாத்தளை | 45 |
| மாத்தறை | 61 |
| மொனராகலை | 35 |
| முல்லைத்தீவு | 19 |
| நுவரெலியா | 34 |
| பொலனறுவை | 43 |
| புத்தளம் | 89 |
| இரத்தினபுரி | 100 |
| திருகோணமலை | 34 |
| வவுனியா | 27 |
| மொத்தம் | 1,670 |

மேற்படி முறைப்பாடுகளில் சிறுவர் ஊழியம் சம்பந்தமாக அறிக்கையிடப்படுகின்ற முறைப்பாடுகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொழில் திணைக்களத்தின் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன், ஏனைய முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களிடம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்படும்.

அதற்கமைய, 2018.01.01 முதல் 2018.12.31 ஆம் திகதி வரை சட்டப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த முறைப்பாடுகளில் 545 முறைப்பாடுகள் தேவையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த முறைப்பாடுகளின் நடவடிக்கைகளை நிறைவு செய்ய சட்டப் பிரிவுக்கு இயலுமாயிற்று.

**விசேட பொலிஸ் விசாரணைகள்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை ஊடாக மற்றும் வேறு முறைகளின் மூலம் பொது மக்களிடமிருந்து கிடைக்கின்ற சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகளை துரிதமாக விசாரணை செய்து சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பொலிஸ் விசாரணை அலகு நடவடிக்கை மேற்கொள்கின்றது. இதற்காக 24 மணி நேரமும் இயங்கிவருகின்ற அலுவலர்கள் 34 பேரைக் கொண்ட குழு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

**2018 ஆம் ஆண்டு விசேட பொலிஸ் விசாரணை பிரிவுக்கு நேரடியாகக் கிடைத்த முறைப்பாடுகள்**

| முறைப்பாட்டின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை | விசாரணையின் தற்போதைய நிலைமை (ஆரம்ப பொலிஸ் விசாரணை) | பொலிஸ் நிலையத்தில் விசாரிக்கப்பட்டு மத்தியஸ்தம் செய்யப்பட்ட முறைப்பாடுகள் | நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்ற எண்ணிக்கை | நீதிமன்றத்தில் விசாரணை முடிந்துள்ளவை |
|---|---|---|---|---|---|
| சிறிய குற்றச் செயல்கள் | 52 | விசாரணை நிறைவு | - | 36 | 16 |
| நானாவித முறைப்பாடுகள் | 56 | விசாரணை நிறைவு | 47 | 09 | - |
| சிறுவர் குற்றச்செயல்கள் | 36 | விசாரணை நிறைவு | - | 34 | 02 |
| **மொத்தம்** | **144** | - | **47** | **79** | **18** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
## 2018.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக்கூற்று

(ரூபா)

| விபரம் | குறிப்பு | 2018 | 2017 |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| மீண்டுவரும் கொடை – திறைசேரி | | 236,480,000.00 | 230,972,593.19 |
| -ஏனைய நிறுவனங்கள் | 1 A | 68,494.88 | 1,197,600.01 |
| ஏனைய வருமானங்கள் | 1 B | 23,503,171.77 | 23,966,627.04 |
| தேசிய செயற்றிட்டத்திற்கு திறைசேரியின் கொடை | | 45,078,475.70 | 39,362,693.04 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்கான கொடை | 1 C | 1,000.00 | 448,800.00 |
| **மொத்த வருமானம்** | | **305,131,142.35** | **295,948,313.28** |
| ***செலவினம்*** | | | |
| நிருவாக செலவினம் | 2 | 218,712,109.88 | 214,624,146.43 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | 3 | 93,776,458.60 | 98,018,188.89 |
| கருத்திட்டச் செலவினம் | 4 | 68,494.88 | 1,197,600.01 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் செலவினம் | 5 | - | 594,300.00 |
| நிதிச் செலவினம் | 6 | 12,967.08 | 12,750.72 |
| | | | |
| **மொத்த செலவினம்** | | **312,570,030.44** | **314,446,986.05** |
| **காலப்பகுதிக்குரிய தேறிய மிகை கூ (குறை)** | 7 | **(7,438,888.09)** | **(18,498,672.77)** |

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**
**2018.12.31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக்கூற்று**
ரூபா

| விபரம் | குறிப்பு | 2018 | 2017 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 8 | 86,302,081.19 | 103,384,535.03 |
| பூர்த்தி செய்யப்படாத வேலை வவுனியா கட்டிடம் நிர்மாணம் | | 3,026,148.14 | - |
| குத்தகைக் காணி | | 21,707,906.51 | 22,486,947.61 |
| முதலீடும், சேமிப்பும் | 9 | 7,982,626.65 | 8,040,348.65 |
| நீண்டகால கிடைக்க வேண்டிய சொத்துக்கள் | 10 | 501,043.36 | 1,020,779.99 |
| | | **119,519,805.85** | **134,932,611.28** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்பு - எழுதுகருவி | | 487,502.77 | 459,919.81 |
| இடர் கடன் | | 470,734.14 | 470,734.14 |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | 11 | 21,053,750.23 | 24,135,268.31 |
| முற்பணக் கொடுப்பனவு | 12 | 666,726.54 | 607,562.00 |
| காசும், காசுக்கு சமமானவையும் | 13 | 3,387,629.91 | 4,256,729.99 |
| | | **26,066,343.59** | **29,930,214.25** |
| **மொத்த சொத்துக்கள்** | | **145,586,149.44** | **164,862,825.53** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| பணிக்கொடை ஒதுக்கம் | | 35,394,403.00 | 11,850,245.00 |
| கருத்திட்ட கணக்குளின் மிகை அல்லது (குறை) | 14-A | 1,601,668.55 | 1,592,113.43 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் | 14-B | (321,549.73) | (322,549.73) |
| | | **36,674,521.82** | **13,119,808.70** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| நின்ற கணக்குகள் | 15 | 18,672,035.08 | 11,244,109.98 |
| குறுங்கால ஏற்பாடுகள் | 16 | 1,782,034.14 | 1,041,850.14 |
| | | **20,454,069.22** | **12,285,960.12** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **57,128,591.04** | **25,405,768.82** |
| **தேறிய சொத்துக்கள்** | | **88,457,558.40** | **139,457,056.71** |
| **நிதியீட்டல்** | | | |
| மூலதனக் கொடைகள் | 17 | 61,247,752.69 | 64,646,736.53 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 1,930,000.00 | 2,895,000.00 |
| தடுத்துவைக்கப்பட்ட உழைப்புக்கள் | | 25,279,805.71 | 71,915,320.19 |
| | | **88,457,558.40** | **139,457,056.72** |

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**
**2018.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான காசோட்டக்கூற்று**

**(ரூபா)**

| விபரம் | குறிப்பு | **2018** | **2017** |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம்** | | | |
| பொதுவான செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மிகை(குறை) | | (7,438,888.09) | (18,498,672.77) |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் | | | |
| பணிக்கொடை ஒதுக்கம் | | 17,779,419.00 | - |
| மூலதனக் கொடை - குத்தகை | | 17,096,573.27 | - |
| தடுத்துவைத்தல் உழைப்பு | | (39,195,626.39) | - |
| **காசல்லாத மாற்றங்கள்** | | | |
| தேய்மானம் | 8 | 21,432,928.78 | 22,753,655.63 |
| குத்தகை காணி தேய்மானம் | | 779,041.10 | 779,041.10 |
| தேய்வடைந்த மூலதனக் கொடை | | (21,246,969.88) | (98,103,450.04) |
| தேய்வடைந்த கருத்திட்ட நிதி | | 9,555.12 | (4,332,453.39) |
| தேய்வடைந்த மூலதன ஒதுக்கம் | | | (2,153,119.00) |
| தேய்வடைந்த மீள்மதிப்பீட்டு சேர்மம் | | (965,000.00) | (10,105,000.00) |
| மூலதனக் கொடை - உபகரணம் | | - | 1,143,652.18 |
| தடுத்துவைத்த உழைப்புக்களின் அதிகரிப்புகுறைவு | | - | 93,370,600.63 |
| செலுத்த வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு | | 7,427,925.10 | (27,782,338.59) |
| குறுங்கால ஒதுக்கங்களின் அதிகரிப்பு | | 740,184.00 | 97,000.00 |
| இருப்பு (அதிகரிப்பு&குறைவு) | | (27,582.96) | (20,604.72) |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் (அதிகரிப்பு&குறைவு) | | 3,081,518.08 | 20,204,055.65 |
| முன்செலுத்தல்கள் (அதிகரிப்பு&குறைவு) | | (59,164.54) | 1,980,751.31 |
| பணிக்கொடைப் பங்களிப்பு | | 6,137,143.00 | 4,522,658.50 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய காசோட்டம்** | | **5,551,055.59** | **(16,144,223.51)** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்** | | | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | | (4,358,002.89) | (22,274,875.02) |

| | | | |
|---|---|---|---|
| நிலையான சொத்து அகற்றல் | | 7,527.96 | - |
| பூர்த்தி செய்யப்படாத வேலைகள் வவுனியா கட்டிடத்தை ஒழுங்குபடுத்தல் | | (3,026,148.14 | - |
| நீண்டகால கிடைக்க வேண்டிய கணக்குகள் (அதிகரிப்பு { குறைவு) | | 519,736.63 | (920,553.29) |
| முதலீட்டுப் பயன்கள் | | 57,722.00 | 1,694,417.55 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **(6,799,164.44)** | **(21,501,010.76)** |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம் | | | |
| | | (372,404.00) | (178,687.50) |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதி (அதிகரிப்பு&குறைவு) | | - | (465,404.00) |
| மூலதனக் கொடை பெறுகை | | 751,412.77 | 500,000.00 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **379,008.77** | **(144,091.50)** |
| காசும், காசுக்குச் சமமானவைக-ளினதும் தேறிய குறைவு | | **(869,100.08)** | **(37,789,325.77)** |
| ஆரம்ப காசும் காசுக்குச் சமமா-னவைகளும் | | **4,256,729.99** | **42,046,055.76** |
| **ஆண்டின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவையும்** | 13 | **3,387,629.91** | **4,256,729.99** |

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**
**2018.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான உரிமைமாற்றம் பற்றிய கூற்று**

**(ரூபா)**

| | மூலதனக் கொடை | மீள்மதிப்பீட்டுச் சேர்மம் | தடுத்து வைக்கப்பட்ட உழைப்புக்கள் | மொத்த உரிமையாண்மை |
|---|---|---|---|---|
| **2017 ஜனவரி 01 ஆம் திகதிக்கு சீராக்கல் செய்த மீதி** | **84,882,283.88** | **3,860,000.00** | **90,268,492.96** | **179,010,776.84** |
| விரிவான வருமானம் | | | | |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | (18,353,172.77) | (18,353,172.77) |
| ஏனைய மொத்த விரிவான வருமானம் அல்லது செலவினம் | (20,235,547.35) | (965,000.00) | | (21,200,547.35) |
| **2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி** | **64,646,736.53** | **2,895,000.00** | **71,915,320.19** | **139,457,056.72** |
| முன்னைய ஆண்டின் தவறுகளை சீராக்கல் செய்தல் | 17,096,573.27 | **-** | (39,195,626.39) | (22,099,053.12) |
| **2018 ஜனவரி 01 ஆம் திகதிக்கு சீராக்கல் செய்த மீதி** | **81,743,309.80** | **2,895,000.00** | **32,719,693.80** | **117,358,003.60** |
| விரிவான வருமானம் | | | | |
| ஆண்டிற்கான இலாபம் | - | **-** | (7,439,888.09 | (7,439,888.09 |
| ஏனைய மொத்த விரி-வான வருமானம் அல்லது செலவினம் | (20,495,557.11 | (965,000.00) | - | (21,460,557.11) |
| **2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி** | **61,247,752.69** | **1,930,000.00** | **25,279,805.71** | **88,457,558.40** |

# தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. வீரீவை /சீ/என்சீபீஏ/2018/01/22 திகதி : 2019 மே 27
திகதி

தலைவர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டரீதியான, ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பிலான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

1. **நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக்கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கள் பற்றிய குறிப்புக்கள் பொழிப்புரையான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்திற்கு அமைய எனது பணிப்பின் பேரில் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு அமைய எனது அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பளியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகவுள்ள பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனகத்தின் 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியன இலங்கை அரசதுறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய உண்மையாக மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பளியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பந்திக்கு அமைய தேவைப்படுத்தப்படும் அல்லது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்படக் கூடாதெனினும், கணக்குப் பதிவுத் தவறுகள் காரணமாக நீண்டகாலமாக காணப்பட்டு வருகின்ற கருத்திட்ட நிதியங்கள் நான்கின் கூட்டுத்தொகை ரூபா 1,657,000 ஆன வரவு மீதி மற்றும் ஆறு நிதியங்களின் கூட்டுத்தொகையான ரூ. 3,258,669 ஆன செலவு மீதி தீர்க்கப்படாது ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு ரூபா 1,601,669 ஆன தேறிய செலவு மீதி நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்திக்கு அமைய நடைமுறையல்லாத சொத்துக்களின் விளைதிறன்மிக்க ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக செலவினம் ரூ. 19,041,533 ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டுள்ள போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அதற்கமைய மதிப்பீட்டு தவறை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இற்கு அமைய திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 69 ஆம் பந்திக்கு அமைய சொத்துத் தேய்மானம் செய்வது ஆரம்பமாவது அதனைப் பயன்படுத்த ஆயத்தப்படுத்திய நிலைமைக்குக் கொண்டுவந்த பின்னராகும். அவ்வாறாயினும் மீளாய்வு ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 4,358,002 பெறுமதிமிக்க சொத்துக்களுக்காக முழு ஆண்டுக்கும் தேய்மானம் செய்யப்பட்டதனால் ஆண்டின் தேய்மானம் ரூ. 701,926 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 55 ஆம் பந்திக்கு முரணாக 2 மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதன் மீள்மதிப்பீட்டு மிகை 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டு வரை ரூ. 965,000 வீதம் வருடாந்தம் நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் பிற்போடப்பட்ட வருமானமாக சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

**1.3 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவம் மற்றும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகத் தயார் செய்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு முடியுமானதாகும் வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது, அதிகாரசபையினை தொடர்ச்சியாக பேணிவருவதற்கான ஆற்றலைத் தீர்மானம் செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன், முகாமைத்துவம் அதிகாரசபையை முடிவுறுத்த எதிர்பார்க்குமாயின் அல்லது வேறு மாற்றுவழிமுறைகள் இல்லாத பட்சத்தில் செயற்பாட்டை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாயின் அன்றி தொடர்ச்சியான நிலைத்திருத்தலின் அடிப்படையில் கணக்குப் பதிவு மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் தொடர்பில் ஏற்புடையதான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பை, கட்டுப்படுத்தும் தரப்பினர் கொண்டிருப்பார்கள்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவுக்கு அமைய, நிறுவனத்தின் வருடாந்த மற்றும் கால அடிப்படையிலான நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யக்கூடியவாறு தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் முறையாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணிவருதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கட்டுப்படுத்தும் தரப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

## 2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பிலான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கையில் முனைப்பளியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன், எனது பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளவாறு முறையான நிதி அறிக்கைகளை அதிகாரசபை பேணிவந்துள்ளது.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபை சமர்ப்பித்துள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைகின்றன.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (IV) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கடந்த ஆண்டு நான் மேற்கொண்ட சிபாரிசுகள், சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்குகின்றன.

பின்பற்றப்பட்ட நடவடிக்கைமுறை மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் போதியளவிலான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்படுவதன் அடிப்படையில், பின்வரும் கூற்றுக்களை வெளியிடுமளவுக்கு எதைனையும் நான் அவதானிப்புச் செய்யவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபையின் நிருவாக சபையின் யாராயினும் உறுப்பினர் ஒருவருக்கு அதிகாரசபை சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு வகையில் சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்பு உள்ளமை.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்கள் தவிர நிறுவனத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பணிகளுக்கு ஏற்புடையதாகாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது.

| தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பணிகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| 1998 இன் 58 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14(அ) பிரிவுக்கு அமைய சிறுவர் துர்நடத்தைகள் மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளான சிறுவர்களைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது பற்றிய தேசியக் கொள்கையை தயார் செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல். | அதிகாரசபை தாபிக்கப்பட்டு 20 வருடங்கள் கடந்துள்ள போதிலும், கொள்கை தயார் செய்யப்பட்டிருக்காமை காரணமாக பல்வேறு வகையிலான துர்நடத்தைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் மற்றும் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு பிள்ளைகள் ஆளாவது அதிகரித்திருந்தது. |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பு தவிர அதிகாரசபையின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கவாறும், விளைதிறன்மிக்கவாறும் உரிய காலப்பகுதிகளுக்குள் குறித்த சட்டங்கள் விதிகளுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்தியிருக்கவில்லை என்பது.

  2016 ஆம் ஆண்டு ரூ. 18,317,757 பெறுமதிக்கு குத்தகைக் கொள்வனவு அடிப்படையில் பெற்றுக் கொண்ட காணி 2019 மே மாதம் 09 ஆம் திகதி வரை பயன்படுத்தப்படாதிருந்தது.

**ஒப்பம் / டபிள்யு.பீ.சி. விக்ரமரத்ன,**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி.**